# October 14, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆந்திர முதல்வர் என்.சந்திரபாபு நாயுடுவை சந்தித்துப் பேசிய தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய், தமிழகத்துக்கு கிருஷ்ணா நதிநீரை கூடுதலாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

(i) கோதாவரி-காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

(ii) 1983-இல் அப்போதைய இரு மாநில முதல்வர்கள் எம்.ஜி.ஆர். மற்றும் என்.டி.ஆர். ஆகியோர் மேற்கொண்ட தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 12 டிஎம்சி நீரை தமிழகத்துக்கு ஆந்திரம் விடுவிக்க வேண்டும்.

(iii) கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டம்:

- நீர்த்தேவையில் 30 சதவீதத்துக்கும் அதிகமாக அண்டை மாநிலங்களையே தமிழகம் சார்ந்திருக்கிறது என்பதால், நீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத்தீர்வுகாண கோதாவரி-காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஆந்திர முதல்வரிடம் முதல்வர் விஜய் வலியுறுத்தியதாக தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.
- மேலும், ‘இந்தத் திட்டம் தென் மாநிலங்களின் உறுதுணையாகவும், விவசாயத்துக்கு குடிநீர்ப் பாதுகாப்பை வலுப்படுத்தும் என் பதாலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக இதை அறிவிக்குமாறு பிரதமர் மோடியை கேட்டுக் கொண்டேன். எனவே, கோதாவரி- காவிரி இணைப்பு திட்டத்தை ஆந்திர முதல்வர் முன்னெடுக்க வேண்டும்' என்று முதல்வர் விஜய் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

(iv) சென்னைக்கு கூடுதல் நீர்:

- தற்போதைய நிலவரப்படி சென்னையின் 5 குடிநீர்த் தேக்கங்களின் மொத்தக் கொள்ளளவில் சுமார் 35 சதவீத நீர் மட்டுமே உள்ளது. கால்வாய் மூலம் சென்னைக்கு வழங்கப்படும் கிருஷ்ணா நீர் சென்னையின் குடிநீர் தேவைக்கு மிகவும் முக்கியமானதாகும். நடப்பு நீர் ஆண்டில், கூடுதலாக தண்ணீரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

(v) ஆந்திரத்தில் தண்ணீர் பற்றாக்குறை நிலவினாலும் தமிழகத்துக்குத் தேவையான நீரை வழங்குவோம் என்று அந்த மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு உறுதி அளித்தார்.

2. கனடா பிரதமர் மார்க் கார்னியுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வழியில் கலந்து ரையாடினார். அப்போது, இரு நாடுகளிடையேயான வர்த்தகம்,

எரிசக்தி, தொழில்நுட்பம், பாதுகாப்பு, மக்களுக்கு இடையேயான உறவுகள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

(i) கனடா சர்வதேச வர்த்தக அமைச்சர் மனீந்தர் சித்து தலைமையில் 300 வர்த்தகப் பிரதிநிதிகளைக் கொண்ட குழு இந்தியா வந்துள்ள நிலையில், இரு பிரதமர்களும் தொலைபேசி வழியில் ஆலோசனை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. மும்பை மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்களில் வரும் 17-ஆம் தேதி வரை இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளில் இக் குழு ஈடுபட உள்ளது.

(ii) முன்னதாக, கடந்த மார்ச் மாதம் இந்தியா வந்த மார்க் கார்னி, பிரதமர் மோடியுடன் மேற்கொண்ட ஆலோசனைக்குப் பிறகு, இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை (சிஇபிஏ) இரு தலைவர்களும் அறிவித்தனர். இந்த ஒப்பந்தத்தை நிகழாண்டுக்குள் இறுதி செய்ய இரு நாடுகளும் தீவிரம் காட்டி வருகின்றன.

3. லடாக்கில் 28 இடங்களை வரைபடத்தில் குறித்த இந்தியாவின் நடவடிக்கைக்கு சீனா எதிர்ப்பு

(i) லடாக்கில் 28 முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இந்தியா வரைபடத்தில் குறித்தது

- அக்டோபர் 2-ஆம் தேதி, லடாக் யூனியன் பிரதேசத்தில் உணர்வுபூர்வமான பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த 28 இடங்களை, உள்ளூர் நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து, இந்தியா அதிகாரப்பூர்வமாக வரைபடத்தில் குறித்தது. பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் கோக்ரா (Gogra), ஹாட் ஸ்பிரிங்ஸ் (Hot Springs) உள்ளிட்ட இடங்களும் அடங்கும்.
- 2022-ஆம் ஆண்டு மே மாதத்தில், கோக்ரா மற்றும் ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதிகளில் இந்திய, சீன ராணுவ வீரர்களுக்கு இடையே மோதல் மற்றும் பதற்றமான சூழல் நிலவியது. இதனால் இரு நாடுகளும் அப்பகுதிகளில் அதிக அளவில் ராணுவ வீரர்களைக் குவித்தன. பின்னர், பேச்சுவார்த்தைகள் மூலம் படைகளைத் திரும்பப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வரைபடத்தில் குறிக்கப்பட்ட 28 இடங்கள்:

அலிஷா கிரி (Alisha Giri), பிரங்சா (Brangsa), சச்சிங்கல் கணவாய் (Sachingal Pass), கனிஷ்கா சிகரம் (Kanishka Peak), கருண் பிர் மலை (Karun Pir Mountain), குக்செல் (Kuksel), மார்தாண்ட் கிரி (Martand Giri), பர்பிக் பனிப்பாறை (Parbik Glacier), ஸ்காம்ரி பனிப்பாறை (Skamri Glacier), சச்மிரிக் கணவாய் (Sachmirik Pass), ஷ்கோர்கா பள்ளத்தாக்கு (Shkorka Valley), ஜோராவர் சிகரம் (Zorawar Peak), தேஹ்ரா காம்பஸ் (Dehra Compass), டிராக் கார்போ (Drak Karpo), ஜோல்மோரி (Jolmori), குமாராயணா முனை (Kumarayana Point), பாங்லுங் (Panglung), ரின்சென் சாங்போ (Rinchen Zangpo), சாக்யஸ்ரீ கிரி (Sakyasri Giri), குரு ரின்போச்சே (Guru Rinpoche), ஷாமல் லுங்பா (Shamal Lungpa), யாங்பா

நதி (Yangpa River), மார்பா லோட்சாவா ரி (Marpa Lotsawa Ri), மிலரேபா காங்க்ரி (Milarepa Kangri), சிவா ரி (Shiva Ri) மற்றும் மகேஷ்வரா ரி (Maheshwara Ri).

(ii) சீனா கடும் எதிர்ப்பு

- பெய்ஜிங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங், இந்தியாவின் நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.
- "ஒருதலைப்பட்சமாகவும் சட்டவிரோதமாகவும் உருவாக்கப்பட்ட" லடாக் யூனியன் பிரதேசத்தை சீனா அங்கீகரிக்கவில்லை என்று மாவோ நிங் தெரிவித்தார். மேலும், இந்த 28 இடங்களை வரைபடத்தில் குறித்ததால், அந்தப் பகுதிகள் சீனாவுக்குச் சொந்தமானவை என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

(iii) சீனாவின் கூற்றை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்தது

- புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், சீனாவின் எதிர்ப்பைத் திட்டவட்டமாக நிராகரித்தார்.
- லடாக் யூனியன் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாகும் என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார். சீனா இதனைத் தொடர்ந்து மறுத்து வந்தாலும், ஏற்கெனவே நிலைநாட்டப்பட்ட இந்த உண்மையை மாற்ற முடியாது என்றும் தெரிவித்தார்.
- மத்திய உள்துறை அமைச்சகம் அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிட்ட செய்திக் குறிப்பின்படி, உள்ளூர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, இந்திய சர்வே துறையின் (Survey of India) அதிகாரப்பூர்வ வரைபடங்களில் பயன்படுத்தப்படும் தரப்படுத்தப்பட்ட பெயரிடும் முறையின் அடிப்படையில் இந்த 28 இடங்களுக்கும் பெயர்கள் அடையாளம் காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

4. நடப்பு 2026-27-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) கணித்துள்ளது.

(i) கடந்த ஜூலையில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.4 சதவீதமாக இருக்கும் என்று கணித்திருந்த ஐஎம்எஃப், இப்போது அதை உயர்த்தியுள்ளது. மேலும், உலக அளவில் வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா நீடிக்கும் என்றும் ஐஎம்எஃப் தெரிவித்துள்ளது.

(ii) தாய்லாந்தின் பாங்காக் நகரில் ஐஎம்எஃப்- இன் வருடாந்திர கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் வெளியிடப்பட்ட உலக பொருளாதார கண்ணோட்ட அறிக்கையில் மேற்கண்ட விவரம் இடம் பெறுள்ளது.

(iii) நடப்பு நிதியாண்டில் 7 சதவீத வளர்ச்சியுடன் உலக அளவில் வேகமாக வளரும் பெரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா நீடிக்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வாக உள்ள போதிலும், மீண்டெழும் உள்நாட்டு தேவைகள் மற்றும் வலுவான சேவைத் துறை செயல்பாடுகளால் முன்பு எதிர்பார்க்கப்பட்டதைவிட இந்தியாவின் வளர்ச்சி அதிகரிக்கும்; மக்கள்தொகை சாதக அம்சங்கள், விரிவடைந்து வரும் உள்நாட்டுச் சந்தை, தொடர்ச்சியான அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் உள்ளிட்ட காரணிகளால் வளர்ச்சிக்கான நிலையான உத்வேகத்துடன், பிற பெரும் பொருளாதாரங்களைப் போல் இல்லாமல் இந்தியா தனிச்சிறப்புடன் உள்ளது.

(v) ஐரோப்பிய யூனியன், பிரிட்டன் ஆகியவை இந்தியாவுடன் மேற்கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களால், இந்நாடுகளில் வர்த்தக ரீதியிலான வரி தடைகள் நீங்கும். மேலும், விநியோக சங்கிலி மீள்தன்மை வலுப்படும் என்று ஐஎம்எஃப் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. தொழில்நுட்பத்தின் உதவியுடன் முறையான அணுகுமுறையைக் கையாண்டால் வினாத்தாள் கசிவை எளிதில் தடுத்துவிட முடியும்' என்று மத்திய அரசு அமைத்த உயர்நிலை பணிக் குழுவின் தலைவர் இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் நந்தன் நிலேகணி தெரிவித்தார்.

(i) மருத்துவப் படிப்புகளுக்கான தகுதிகாண் நுழைவுத் தேர்வு (நீட்) முறைகேடு பெரும் சர்ச்சையானதைத் தொடர்ந்து, தேசிய தேர்வு (என் டி.ஏ) முகமையால் நடத்தப்படும் தேர்வுகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைகளை வழங்க நந்தன் நிலேகணி தலைமையில் இந்த உயர்நிலை பணிக் குழுவை மத்திய அரசு அமைத்தது. இதில், இஸ்ரோ முன்னாள் தலைவர் எஸ்.சோமநாத், புலனாய்வுத் துறை முன்னாள் இயக்குநர் தபன்குமார் டேகா, சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, கல்வித் துறை முன்னாள் செயலர் அனிதா கர்வால், தளவாடங்கள்- நிர்வாகத் துறை நிபுணர் அம்ருத் லால் மீனா ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழு, பொதுத்தேர்வுகள் சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் உள்பட அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று ஆராய்ந்து, இடைக்கால அறிக்கையை மத்திய அரசிடம் அண்மையில் சமர்ப்பித்தது. இறுதி அறிக்கையை விரைவில் சமர்ப்பிக் கும் என எதிர்பார்கப்படுகிறது.

6. ஒருங்கிணைந்த பணம் செலுத்துதல் வசதி (யுபிஐ) மூலம் ரூ.2,000-க்கு மேல் மேற்கொள்ளப்படும் வணிகப் பரிவர்த் தனைகளுக்கு வணிகர்களிடம் ஒரு பரிவர்த்தனைக்கு 0.4 சதவீதம் என்ற விகிதத்தில் வணிகர் தள்ளுபடி விகித (எம்டி ஆர்) கட்டணம் வசூலிக்கும் நடைமுறை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(i) இந்த கட்டண நடைமுறை வரும் அக்.15-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டண நடைமுறையை அமல்படுத்துவதற்கான புதிய தேதி, தீபாவளி பண்டிகைக்குப் பிறகு தீர்மானிக்கப்படும் என்று இந்திய தேசிய பணப் பரிவர்த்தனை நிறுவனம் (என்பிசிஐ) தெரிவித்தது.

(ii) இது, வணிகர்களுக்கு மிகப் பெரிய நிவாரணமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) யுபிஐ பரிவர்த்தனைக்குவணிகர் களிடம் எம்டிஆர் கட்டணம் வசூலிக்க ஏதுவாக, யுபிஐ உள்ளிட்ட மின்னணு பணப் பரிவர்த்தனைகள் மீது வங்கிகள் சேவைக் கட்டணம் வசூலிக்கத் தடை விதிக்கும் 'பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு நடைமுறைகள் சட்டம் 2007- இன் பிரிவு 10 -இல் திருத்தம் மேற்கொண்டு, அவற்றின் மீது வணிகர் தள்ளுபடி விகிதம் - எம்டிஆர் அடிப்படையில் கட்டணம் வசூலிக்க வகை செய்யும் 'வரி மற்றும் பிற சட்டங்கள் திருத்த மசோதா 2026’ -ஐ மத்திய அரசு நிறைவேற்றியது.

(iv) இந்தச் சட்டத்தின் அடிப்படையில், எம்டிஆர் கட்டணம் தொடர்பான அரசிதழ் அறிவிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. அதன்படி, யுபிஐ மூலம் ரூ.2,000-க்கு மேல்மேற்கொள்ளப்படும் வணிகப் பரிவர்த்தனைகளுக்கு வணிகர்களிடம் ஒரு பரிவர்த்தனைக்கு 0.4 சதவீதம் என்ற விகிதத்தில் வணிகர் தள்ளுபடி விகித (எம்டிஆர்) கட்டணம் வசூலிக்கப்படும். ரூ.75,000 மற்றும் அதற்கு மேலான வணிகப் பரிவர்த்தனைகளுக்கு ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.300 கட்டணம் என்ற வகையில் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. அத்தியாவசியத் துறைகளான ரயில்வே,தொலைத்தொடர்பு, எரி பொருள் விநியோகம் உள்ளிட்ட துறைகளில் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.5 என்ற அளவில் நிலையான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. வரும் அக்.15-ஆம் தேதி முதல் இந்த கட்டண நடைமுறை அம லுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

7. நீதியின் பெரு நிழல் – நவநீதம் பிள்ளை

(i) அமைதிக்கான நோபல் பரிசு அறிவிப்பு மற்றும் அர்ப்பணிப்பு

- அக்டோபர் 9-ஆம் தேதி, தமிழ் மரபைப் பூர்வீகமாகக் கொண்ட 85 வயதான மனித உரிமைப் பாதுகாவலர் நவநீதம் “நவி” பிள்ளைக்கு, சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக வாழ்நாள் முழுவதும் ஆற்றிய பணிகளுக்காக, ஒஸ்லோவில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த நோபல் அமைதிப் பரிசு பெற்ற ஐந்தாவது ஆளுமை இவர் ஆவார். நெல்சன் மண்டேலா மற்றும் டெஸ்மண்ட் டுட்டு போன்ற புகழ்பெற்ற தலைவர்களின் வரிசையில் இவர் இடம்பெறுகிறார்.
- சர்வதேசக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சர்வதேச குற்றவியல் நீதிக்காகப் போராடுபவர்களுக்கும் தமது நோபல் பரிசை அவர் அர்ப்பணித்தார். குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிவிடாமல் தடுப்பதில் பாதிக்கப்பட்டவர்களின் கருணையும், நீதிக்காகப் போராடுபவர்களின் துணிச்சலும் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.
- இந்த விருதுக்கு இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் மற்றும் சில யூத அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், விமர்சனங்களும் எழுந்தன.

(ii) குடும்பப் பூர்வீகம், ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் 'பிள்ளை' என்ற குடும்பப்பெயரின் தோற்றம்

- 2019-ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது, கட்டுரையாளரைச் சந்தித்த நவி பிள்ளை, 'பிள்ளை' என்பது தமது குடும்பத்தின் உண்மையான சாதிப் பெயர் அல்ல என்று விளக்கினார். தமது குடும்பத்தின் அசல் சாதி எது என்பதே தங்களுக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.
- ஆய்வுகளின்படி, அவரது தாத்தா, பாட்டி ஆகியோர் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழ் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களில் அடங்குவர். இந்த ஒப்பந்தங்கள் பொதுவழக்கில் 'கிர்மிட்' (Girmit) என்று அழைக்கப்பட்டன. இது ஆங்கிலச் சொல்லான 'Agreement' என்பதிலிருந்து உருவானது. இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் அழைத்துச் செல்லப்பட்ட தொழிலாளர்கள் 'கிர்மிட்டியாக்கள்' (Girmitiyas) என்று அழைக்கப்பட்டனர்.
- தமிழ் சமூகக் கட்டமைப்பைப் புரிந்துகொள்ளாத பிரிட்டிஷ் அதிகாரிகள், கப்பல்களில் குழுக்களாக அழைத்துச் செல்லப்பட்ட பயணிகளுக்கு 'பிள்ளை', 'செட்டியார்', 'நாயுடு' போன்ற பொதுவான குடும்பப்பெயர்களை வழங்கினர். பின்னர், இந்தப் பெயர்கள் அதிகாரப்பூர்வ ஆவணங்களில் நிரந்தரமாகப் பதிவாகிவிட்டன.
- அவரது தாத்தா, பாட்டி ஆகியோர் நாள்தோறும் 12 முதல் 14 மணி நேரம் வரை மிகக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்தனர். மேலும், அவர்கள் 'கூலிப் பகுதிகள்' (Coolie Lines) எனப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளில் வசித்தனர்.
- நவி பிள்ளை தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் எட்டு குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார்.

(iii) நிறவெறிக்கு எதிரான போராட்டமும் பல்கலைக்கழகப் பாகுபாடுகளும்

- தென்னாப்பிரிக்காவில் நிறவெறி ஆட்சி நிலவிய காலத்தில் வளர்ந்த நவி பிள்ளை, அமைப்பு ரீதியான பாகுபாடுகளை எதிர்கொண்டார்.
- 1959-ஆம் ஆண்டின் பல்கலைக்கழகக் கல்வி விரிவாக்கச் சட்டத்தின்படி (Extension of University Education Act), வெள்ளையர் அல்லாத மாணவர்கள் ஜோகன்னஸ்பர்க் மற்றும் கேப் டவுன் போன்ற முன்னணி பல்கலைக்கழகங்களில் சேருவதற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.
- அவர்கள் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத பிராந்தியக் கல்லூரிகளில் சேர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பல்கலைக்கழக வளாகங்களின் சில பகுதிகளுக்குச் செல்லவும் அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்குத் தனியாகப் பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்பட்டன.
- சட்டப் படிப்பை முடித்த பிறகும், அவரது இனப் பின்னணியின் காரணமாக எந்தவொரு சட்ட நிறுவனமும் அவருக்கு வேலை வழங்க முன்வரவில்லை. நீதிபதிகளின் அறைகளுக்குள் நுழைவதற்குக்கூட அவர்

அனுமதிக்கப்படவில்லை.

- இருப்பினும், மனம் தளராத அவர், குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தனியாக ஒரு சட்ட நிறுவனத்தைத் தொடங்கினார்.
- நெல்சன் மண்டேலா தனது 27 ஆண்டுகால சிறைவாசத்தில் 18 ஆண்டுகளைக் கழித்த ராபன் தீவில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளுக்காகவும் அவர் துணிச்சலுடன் சட்டப் போராட்டங்களை முன்னெடுத்தார்.

(iv) நீதித்துறையில் சாதனைகள் மற்றும் சர்வதேசத் தலைமைப் பொறுப்புகள்

- தென்னாப்பிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர், அந்நாட்டின் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் வெள்ளையர் அல்லாத பெண் என்ற வரலாற்றுச் சாதனையை நவநீதம் பிள்ளை படைத்தார்.
- ருவாண்டாவுக்கான சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயத்தின் (International Criminal Tribunal for Rwanda — ICTR) தலைவராகப் பணியாற்றியபோது, போர்க்காலத்தில் நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைகள் இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களாகக் கருதப்படலாம் என்பதை நிலைநாட்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்குவதில் முக்கியப் பங்கு வகித்தார்.
- சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court — ICC) நீதிபதியாகவும், 2008 முதல் 2014 வரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையராகவும் பணியாற்றினார்.
- உலகின் வல்லரசு நாடுகளால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களையும் அவர் அச்சமின்றி எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

(v) ஈழத் தமிழர்களுக்கான ஆதரவும் போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கையும்

- 2009-ஆம் ஆண்டு மே மாதம், இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, பொதுமக்களின் உயிரிழப்புகள் குறித்து சுதந்திரமான, நம்பகத்தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நவநீதம் பிள்ளை வலியுறுத்தினார்.
- உண்மை கண்டறியும் பயணம் (2013): 2013-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், இலங்கை அரசாங்கம் மற்றும் அந்நாட்டு ஊடகங்களிடமிருந்து கடுமையான அவதூறுகளையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டபோதிலும், அவர் நேரடியாக இலங்கையின் போரால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதிகளுக்குச் சென்றார். யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.
- இலங்கையின் உள்நாட்டு விசாரணை பெயரளவிலான ஒன்றாக மட்டுமே இருந்தது என்பதை அவரது அதிகாரப்பூர்வ அறிக்கை வெளிப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (UNHRC) முறையான சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை அமைப்புமுறையை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைப்பதிலும் இந்த அறிக்கை முக்கியப் பங்காற்றியது.
- ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 12 ஆண்டுகள் கடந்திருந்தாலும், முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த சம்பவங்களுக்கான

முழுமையான பொறுப்புக்கூறல் சர்வதேச அளவில் இன்னும் நிறைவேறாமல் உள்ளது.